## இப்படி ஒரு தலைவரைத்தான் இத்தனை காலம் நாடு எதிர்பார்த்தது!

# எல்லோருக்குமாக இருக்கிறார்; அதையும் மீறி எல்லாமுமாக இருக்கிறார் நம் முதல்வர்!

## சென்னை கிழக்கில் – பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்ற முதல்வர் பிறந்த நாள் விழாவில் – கவிஞர் சிநேகன் புகழாரம்!

சென்னை, மார்ச் 24 -

**சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்ற முதல்வர் அவர்களின் 72 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவில் உரையாற்றிய கவிஞர் சிநேகன், "எல்லோருக்குமாக இருக்கறார், அதையும் மீறி எல்லாமுமாக இருக்கிறார், நம்முதல்வர் - இப்படி ஒரு தலைவரைத்தான் இத்தனைக் காலம் நாடு எதிர்பார்த்தது என்று புகழாரம் சூட்டினார்.**

சென்னை கிழக்கு மாவட்டம் சார்பில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்ற முதலமைச்சரின் 72 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவில் கவிஞர் சிநேகன் ஆற்றிய உரை வருமாறு:

மொழி கொடுத்து, விழி கொடுத்து, வழி நடத்தும் அன்னைத் தமிழிடம் என்னை ஒப்படைக்கின்றேன்.

மக்கள் முதல்வரின் மனிதநேய விழா 2025 என்ற தலைப்போடும், திராவிட இயக்கம் ஒரு மாபெரும் பிறந்த நாள் விழாவை நாடு தழுவிய அளவிற்கு நடத்திக் கொண்டிருக்கின்ற ஒரு சிறப்பு மேடையில், என்னையும் அழைத்தமைக்காக அன்பு ஆன்மிகச் செம்மல், அனைவருக்கும் மனிதநேயத்தோடு அன்பைப் பரிமாறக்கூடியவர் அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு அவர்களுக்கு என்னுடைய முதற்கண் நன்றிகளையும், மரியாதையையும் தெரிவித்துக் கொள்வதோடு, இவ்விழாவில் எனக்குமுன் பேசி அமர்ந்திருக்கின்ற அன்புத் தம்பி முத்துக்குமார் அவர்கள் மிக அழகாக தனக்கே உரிய பாணியில், கழகத்தின் சாதனைகளை எடுத்துக் கூறினார் நண்பர்களே!

அதற்குப் பிறகு பேசி அமர்ந்திருக்கின்ற கல்யாண மாலையின் நிகழ்வின் முதுகெலும்பாக இருக்கக்கூடிய அம்மையார் மீரா நாகராஜன் அவர்கள், அவர்களுக்குரிய பாணியில், பெண்களுக்கான சாதனைகளை திராவிட இயக்கம் எப்படி செய்திருக்கிறது என்பதை இங்கே அழகாக எடுத்துக் கூறினார்!

எனக்குப் பிறகு பேசக்கூடியவர் மிகச் சிறந்த மக்கள் கலைஞராகத் திகழ்ந்து கொண்டிருக்கின்ற அய்யா விஜயகுமாராக இருக்கட்டும்,

எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக தமிழோடும், ஆன்மிகத்தோடும் கைகோர்த்து இதுகாறும் நடந்துகொண்டிருக்கின்ற எங்கள் ஆன்மிக ஆதீனகர்த்தா குன்றக்குடி அடிகளார் அவர்கள் பேசுவதாக இருக்கட்டும்; அது திராவிட இயக்கங்களுக்கே உரிய ஓர் ஆளுமை தென்படும் .

### வள்ளுவர்தான் குரு!

இந்த விழா தொடங்கும்போது, இன்றைய முதல்வர், என்றைக்கும் முதல்வராகவே அவர் இருக்கவேண்டும் என்கிற எண்ணத்தோடு, இன்றைக்கு தமிழகம் முழுக்க உள்ள திராவிட இயக்கத்தின்மூலமாக தன்னுடைய இருப்பிடத்தையும், பாதுகாப்பையும், பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் பத்திரமாகப் பாதுகாத்து வைத்துக் கொண்டிருப்பவர்கள் எல்லாம், அவர்பால் இன்றைக்கு ஓரணியில் நின்று, இந்தத் திராவிட இயக்கத்தினுடைய அடுத்த கட்டத்தை நகர்த்துவதற்குக் காரணம் என்பது தான் ஒரு மிகப்பெரிய ஆச்சரியமாக இருக்கின்றது.

தந்தையும், மகனும் – அதாவது முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞரும், இந்நாள் முதலமைச்சர் நாமெல்லாம் அன்போடு தளபதி என்று அழைக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களும், குருவாக எடுத்துக்கொண்ட ஒருவர் யார் என்றால், இருவருக்கும் குரு வள்ளுவர்தான்.

இருவருக்கும் குரு வள்ளுவர்தான், ஆனால், தந்தை முன்னவராகவும், தனயன் பின்னவராகவும் இங்கே அந்த வள்ளுவம் அறம் தவறாமல் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதற்கு, இன்றைக்குச் சாட்சியமாக நம்முடைய முதல்வர் நின்று கொண்டிருக்கின்றார் .

**"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்"**

என்று தந்தை, தன் மகனை உயர்ந்த ஒரு கல்வி அரங்கத்தில், கற்றோர் அவையில் முன் வரிசையில் அமரும்படி ஆக்கவேண்டும் என்று அந்தத் தந்தையினுடைய மிகப்பெரிய அந்த வேட்கையை, நிஜமாக்கிக் கொண்டு, எனக்குப் பின் வருகின்ற இந்தத் திராவிட இயக்கத்தின் ஓட்டத்தை நீதான் தொடரவேண்டும் என்று செயல்களாலும், தன்னுடைய சிந்தனையாலும் அவரை வழிநடத்திச் சென்றிருக்கின்றார்.

எனவே, அவர் குருவிற்கு நியாயமாக நடந்திருக்கின்றார். ஏனென்றால், தந்தை, குருவாக ஏற்றுக்கொண்டவரையே, மகனும் குருவாக ஏற்றுக் கொண்டிருக்கின்றார் அல்லவா!

அதற்காக அவர் எங்கே பயன்படுத்தியிருக்கின்றார் என்றால்,

"மகன் தந்தைக்கு ஆற்றும்உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்"

இவரை, பெறுவதற்கு என்ன தவம் செய்திருப்பார்களோ, அவர்கள் தாய், தந்தையர் என்று புகழும் அளவிற்கு ஒரு மகன் வளர வேண்டும் என்றார்.

### முதல்வரின் ஆளுமை!

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், நீங்களும், நானும் நினைப்பதுபோன்று, ஓர் இயக்கம் என்பதும், ஒரு கட்டமைப்பு என்பதும், அதுவும் திராவிட இயக்கம் என்பது ஒரு பெருங்கடல். இதில் ஆயிரக்கணக்கான திமிங்கலங்கள் அலைபாய்ந்து, எங்கே கரையேறலாம்? எங்கே வேட்டையாடலாம்? என்று இருந்தபோதுகூட, அதை இன்னும் கட்டுக்குலையாமல் வைத்திருக்கிறார் அல்லவா முதல்வர், அதற்குக் காரணம் என்ன தெரியுமா?

அவருடைய ஆளுமைதான்!

அதைப் பார்த்து வியந்து போகவேண்டி இருக்கிறது.

எப்போதுமே திராவிட இயக்கத்திற்கு மிகப் பெரிய தளபதிகள் வந்துகொண்டே இருப்பார்கள்.

தந்தையை தலைவனாக ஏற்றுக்கொண்டு, தந்தையின் குருவை, தனது குருவாக ஏற்றுக் கொண்டு, ஒரு மாணவனாக, ஒரு தொண்டனாக அரசியலைத் தொடங்கியவர் நம் முதல்வர்.

ஆனால், இன்றைக்கு அவருக்கு ஒரு தளபதி கிடைத்திருக்கின்றார் அல்லவா, அதுதான் நம்முடைய இளைய தளபதி என்று நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

காரணம் என்னவென்றால், ஒவ்வொரு காலகட்டத்திலும் அமைச்சர் சேகர்பாபு அவர்களுக்கும், எனக்கும் ஒரு பெரிய பந்தம் உண்டு.

### அடுத்தத் தலைமுறைக்கு கொண்டு சேர்க்கவே விழா!

முதன்முதலாக அவர் ஆர்.கே.நகரில் சட்டப்பேரவை உறுப்பினராக நிற்கும்போது, தேர்தலில் பிரச்சார மேடையில் ஏறினேன். நான் ஏறிய முதல் மேடையும் அதுதான்.

அன்றுதொட்டு இன்றுவரையில் அவரை நான் பார்க்கிறேன், அன்றைக்கு எப்படி இருந்தாரோ, இன்றைக்கும் அப்படியே இருக்கிறார்.

எவ்வளவு உயரம் போனாலும், எல்லாவற்றையும் ஒரே மாதிரியாகப் பார்க்கக்கூடிய தன்மையைப் பெற்றிருக்கின்றார்.

நம்முடைய முதல்வர் அவர்களுக்கு 72 ஆவது பிறந்த நாள் என்று சொன்னவுடன், 72 நாள்களையும் திருவிழாவாக அவர் மாற்றுவதற்கு அவர் படுகின்ற பாடு இருக்கின்றது அல்லவா! ஒரு நல்ல தலைவன் கிடைத்திருக்கின்றான்; நல்ல ஆளுமைமிக்க ஒரு மனிதர் கிடைத்திருக்கின்றார். அவரை அடுத்தத் தலைமுறைக்குக் கொண்டுபோய் சேர்க்கவேண்டும் என்கிற மிகப்பெரிய ஒரு வேட்கையோடு, ஒவ்வொரு விழாவையும், தன் வீட்டு விசேசம்போல அவர் எடுத்துக்கொள்கின்ற சிரத்தை என்பது சொல்லி மாளாது.

யார், திராவிட இயக்கத்தோடு கைகோர்த்து வேலை செய்தாலும், அவரோடு முன்வரிசையில் எடுத்தவுடனேயே இருப்பவர் யார் என்றால், அமைச்சர் சேகர்பாபு அவர்கள் மட்டும்தான்.

### 2700 ஆலயங்களுக்கு கும்பாபிசேகம்!

நான், அவரை இந்த மேடையில் புகழ வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. திராவிட இயக்கங்கள் எப்போதும் ஆன்மிகவாதிகளுக்கு எதிரானவர்கள் என்பார்கள். அப்படி ஒரு திராவிட இயக்கம் ஆட்சிக்கு வந்த பிறகு தான், ஏறத்தாழ 2,700 ஆலயங்களுக்கு கும்பாபிசேகம் செய்திருக்கிறது.

இவர்களா ஆன்மிகத்திற்கு எதிரானவர்கள்?

ஆன்மிகம் வேறு; மூடநம்பிக்கை வேறு.

திராவிட இயக்கங்கள் மூடநம்பிக்கைக்கு எதிரானது. மூடநம்பிக்கையின் பேரால் இருக்கும் ஆன்மிகத்திற்கு எதிரானது.

பகுத்தறிவின்பால் இருக்கின்ற எந்த ஆன்மிகத்திற்கும், எந்த ஆன்மிகவாதிகளுக்கும்



அவர்கள் எதிரானவர்கள் இல்லை.

அதனால்தான், இன்றைக்கு எந்த இயக்கங்களும் செய்ய முடியாததை, அறநிலையத் துறை என்ற ஒரு துறையில், என்னவெல்லாம் சாதனை செய்ய முடியுமோ அத்தனையும் செய்திருக்கிறார். இதற்குமுன்பு இருந்தவர்கள் அதை ஆச்சரியத்தோடு பார்க்கிறார்கள். இந்தத் துறையில் இருந்துகொண்டு, இப்படிகூட செய்ய முடியுமா? நாம் எங்கே தவறவிட்டோம் என்று ஆச்சரியப்படுகிறார்கள்.

### அறநிலையத் துறைக்கு கையேடாக இருப்பவர்!

ஒருவேளை, எங்கோ ஒரு காலகட்டத்தில், அடுத்த தலைமுறையில், அறநிலையத் துறைக்கு அமைச்சராக ஒருவர் வருவாரேயானால், அவருக்கும் அன்றைக்குக் கையேடாக இருப்பவர் அமைச்சர் சேகர்பாபு அவர்கள் தான். உண்மை அதுதான்.

ஏனென்றால், அமைச்சர் சொல்வது போன்று, எல்லாவற்றிற்கும் காரணம் தலைவர்தான்.

அதையும் திருக்குறளாலேயே சொல்லி முடிப்போமே!

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

ஏன் இத்தனைப் பேர் இருக்கும்போது, ஆன்மிகத் துறையை உங்களிடம் கொடுக்க வேண்டும்?

இவர்தான் சரியாகச் செய்வார் என்கிற நம்பிக்கைதான் காரணம்.

அன்றைக்கு எப்படி கலைஞர் அவர்கள், ஒரு போராளியாக தன் மகனை உள்ளே இறக்கிவிட்டு, சரியான இடத்தில் வருவான் என்கிற நம்பிக்கையை வைத்தாரோ, அதே நம்பிக்கைதான் இன்றைய முதல்வர் அவர்கள், சேகர் பாபுவுக்கு என்ன துறை கொடுத்தால், நின்று விளையாடுவார்; என்ன துறை கொடுத்தார் சிறப்பாக செயல்படுவார் என்று தெரிந்து, ஒதுக்கிய துறைதான் அறநிலையத் துறை.

### மேயர் நடத்திய தமிழ்மகள் நிகழ்ச்சி!

அதுமட்டுமல்ல, நம்முடைய மேயரைப் பற்றி ஒரு விஷயத்தைச் சொல்லியாகவேண்டும்.

அது என்னவென்றால், எல்லா இடங்களிலும், ஆசிரியரிடம் கற்றுக்கொள்ளும் மாணவியைப் போல, சின்னச் சின்ன விஷயங்களாக இருந்தாலும், ஒரு பெரும் பொறுப்பில் இருக்கும்போதுகூட, அதைப் பணிந்து கற்றுக்கொள்கின்ற ஒரு தன்மை இருக்கிறது அல்லவா, அது தான் தலைமைக்கு முதல் தகுதி.

சில நாள்களுக்கு முன்பு, சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற தமிழ்மகள் என்ற ஒரு நிகழ்ச்சியில், மொழியை வளர்க்க, கலாச்சாரத்தை வளர்க்க 18 கல்லூரிகளிலிருந்து மாணவிகளை வரவழைத்து, அவர்களுக்குப் பேச்சுப் போட்டியை, அமைச்சர் சேகர்பாபு அவர்களின் ஆதரவோடு மிகச் சிறப்பாக நடத்தினார் நம்முடைய மேயர் அவர்கள்.

இதுபோன்ற நிகழ்ச்சியை யாருமே செய்யவில்லை. இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால், என் மொழியை அடுத்த தலைமுறைக்குக் கடத்தவேண்டி இருக்கிறது; என் கலாச்சாரத்தை கடத்த வேண்டியிருக்கிறது.

தம்பி முத்துக்குமார் மொழியைப்பற்றிச் சொல்லும்போது, எதற்காக நாம் இன்றைக்குத் தமிழ் மொழியைத் தூக்கிப் பிடிக்கின்றோம் என்று.

அம்மையார் மீரா நாகராஜன் சொல்லும் போது, மொழி அழிந்தால், கலாச்சாரம் அழிந்துவிடும் என்றார்.

அது உண்மைதான். மொழி இல்லையென்றால், முகவரி எவனுக்கும் கிடையாது.

தி.மு.க. அரசின் திட்டங்களை இங்கே நிறையச் சொன்னார்கள்.

நான் அடுக்கினேன் என்றால், தி.மு.க. காரர்களைவிட அதிகமான திட்டங்களை அழகாக அடுக்கிச் சொல்வேன். ஆனால், அதற்கான நேரம் இல்லை.

ஏனென்றால், பெருமக்கள் பேரறிவாளர்கள் பேசவேண்டி இருக்கிறது. அவர்களுடைய உரையை நான் ஒரு ரசிகனாக கேட்க ஆவலோடு இருக்கிறேன்.

### முதல்வரைக் கொண்டாடாமல் வேறு யாரைக் கொண்டாடுவது!

ஒரே ஒரு விஷயம்தான் – இன்றைக்கு மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், உங்களுக்கான நிதியை ஒன்றிய அரசு தர முடியாது என்று சொல்லும் போதுகூட, சளைக்காமல் ஒரு தலைவன் சொல்கிறான், "நிதியைத் தந்தால் தா, தராவிட்டால் போ" என்று. என் மக்கள் இருக்கிறார்கள். நாங்கள் செய்யவேண்டும் என்று எங்களுக்குத் தெரியும்.

எதற்காகவும் தலைகுனிந்து எங்கள் மொழியை எக்காரணம் கொண்டும் விட்டுக் கொடுக்கமாட்டோம் என்று உறுதியாக நிற்கிறாரே, இப்படி ஒரு தலைவரைத்தான், இத்தனைக் காலம் நாடு எதிர்பார்த்தது.

ஆட்சி மாறலாம், கட்சி மாறலாம், பதவிகள் மாறலாம் – ஆனால், என் மக்களுக்கு என்ன வேண்டும் என்பதைத் தீர்மானிக்கக் கூடியவர்; என் மண்ணுக்கு என்னவேண்டும் என்பதைத் தீர்மானிக்கக் கூடியவர். என் கலாச்சாரத்திற்கு என்ன வேண்டும் என்பதைத் தீர்மானிக்கக் கூடியவர் – இன்றைக்கு நமக்கு முதல்வராக அமர்ந்திருக்கின்றார் என்றால், அவரைக் கொண்டாடாமல், வேறு யாரைக் கொண்டாடப் போகிறோம் நாம்!

### முதல்வரின் பெரிய மனது!

40 ஆண்டுகளுக்குமுன்பு தி.மு.க. அரசாங்கம் விட்டுச் சென்ற ஓரிடத்தை, அ.தி.மு.க. நிமிர்த்துவதில்லை. அதேபோன்று ஒருவர் தொடங்கிய பணியை, இன்னொரு ஆட்சி வரும்போது, அதைத் தொடருவதில்லை.

என்றைக்காவது ஒரு நாள் அவரை நேரில் சந்தித்தால் சொல்லவேண்டும் போல் தோன்றுகிறது.

தி.மு.க ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அ.தி.மு.க. அரசால் கொண்டுவரப்பட்ட திட்டங்கள் அனைத்திற்கும் பெயர் மாற்றப்படும் என்று எல்லோரும் சொன்னார்கள்.

அம்மா உணவகம் என்ற திட்டம், அதே பெயரில் தொடரும் என்றார் நம்முடைய முதலமைச்சர். அதைப் பார்த்து நான் ஆச்சரியப்பட்டேன். மக்களுக்கு நல்லது நடக்கிறதா? நடக்கட்டும், அப்படியே தொடரட்டும் என்றார். அதை ஏற்றுக்கொள்கின்ற மனப்பான்மை என்பது மிகச் சிறப்பானது அல்லவா!

நான் யார் என்பதைக் காண்பிக்கின்ற ஆளுமையோடு இருப்பார்களே தவிர, இல்லை, முன்னவர்கள் வழி சரியானதாக இருந்தால், பின்னவர்கள் அதைத் தொடருவதில் தவறில்லை.

அதைத்தான் நம்முடைய முதல்வர் செய்தார்.

### தீர்க்கமாக இருக்கும் முதல்வர்!

இப்படி எல்லா விஷயங்களிலும், அறிஞர் அண்ணாவை, தந்தை பெரியாரை, அய்யா காமராசரை, இவர்களையெல்லாம் நூலகமாகக் கற்றுக்கொண்டு, தலைவர் கலைஞரோடு கூடவே இருந்த போர்க் குணத்தைக் கற்றுக் கொண்டு, எல்லா வித்தைகளையும் கற்றுக் கொண்டார்.

நான் அடிக்கடி நண்பர்களிடம் சொல்வேன்; யாரிடம் வேண்டுமானாலும் அறிவுரையைக் கேள். ஆனால், முடிவை நீ எடு என்பேன்.

ஆனால், ஆயிரம் தலைவர்களைக் கடந்து வந்தாலும், இன்றைக்கு நம்முடைய முதல்வர், எது சரி? எது மக்களுக்கு சரி? எது மக்களுக்குத் தேவை? எது இப்போது நமக்கான முக்கியமானது? என்பதில் தீர்க்கமாக இருக்கிறார்.

எனவேதான் சொல்கிறேன் இவரைக் கொண்டாடாமல் வேறு யாரைக் கொண்டாடப் போகிறோம்?

அம்மா சொன்னார்கள், ஆயிரம் ரூபாய் கொடுத்ததை பெரிதாக நினைக்கிறார்கள் என்று.

### 1000 ரூபாய் என்பது அவர்களுக்கு நம்பிக்கை!

அதை நாங்கள் ஆயிரம் ரூபாயாகப் பார்க்கவில்லை. அது எவ்வளவு பெரிய உதவியாக இருக்கும் தெரியுமா? என்றார்.

நான் அதைத் தாண்டி சொல்கிறேன், ஆயிரம் ரூபாய் என்பது பணம் அல்ல; நம்பிக்கை.

இந்த அரசாங்கம் என்னை ஒரு தாய்வீடு போல பாதுகாக்கிறது. இன்றைக்கும் தீபாவளி, பொங்கலுக்கு தாய் வீட்டிலிருந்து 500 ரூபாய், 100 ரூபாய் கொடுத்து, பொங்கல் அரிசி கொடுப்பார்கள்; கரும்பு கொடுப்பார்கள்.

அப்படியல்ல; இந்த அரசாங்கத்திற்கும், எனக்கும் ஓர் உறவு இருக்கிறது.

இந்த அரசாங்கத்திற்கும், எனக்கும் ஒரு மிகப்பெரிய பந்தம் இருக்கிறது.

எங்கள் வரவு – செலவு எல்லாம் மிகவும் வெளிச்சமாக இருக்கிறது.

யார் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும், தலைவனாக இருக்கின்ற, என் தந்தையாக இருக்கின்ற ஒருவர், எங்களுக்கு உதவி செய்கிறார்.

இன்னொன்று சொல்கிறேன், ஆண்கள் பாக்கெட்டில் 10 ஆயிரம் ரூபாய் விழுந்தாலும், அது பெரிதாகத் தெரியாது. ஆனால், ஒரு பெண்ணினுடைய மணிபர்சிலோ, வங்கிக் கணக்கிலோ 10 ரூபாய் விழும்போது அவர்களுக்கு ஒரு நம்பிக்கை வரும் – சந்தோசம் வரும்.

அதற்குக் காரணம், அவர்கள் சொன்னதையே நான் மறுமொழியில் சொல்கிறேன் எந்த நாடு, எந்த மண், எந்த கலாச்சாரம் ஒரு பெண்ணின் நம்பிக்கையை சம்பாதிக்கிறதோ, ஒரு பெண்ணின் பாதுகாப்பை உறுதி செய்கிறதோ, ஒரு பெண்ணின் கனவை நிறைவேற்றுகிறதோ, அந்த மண்ணும், அந்த மக்களும் தான் சரியான ஒரு குடியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்கிறார்கள்.

எனவேதான், பெண்களைப் பாதுகாப்பதற்கான எத்தனையோ திட்டங்கள் அதைப்பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம்.

### எல்லாமுமாக இருக்கும் முதல்வர்!

இன்றைக்கு எல்லாருக்குமாக இருக்கிறார் நம்முடைய முதல்வர் என்பதில் எந்த மாற்றுக் கருத்துமில்லை. அதையும்மீறி எல்லாமுமாக இருக்கிறார் அவர்.

மொழியா, கலாச்சாரமா, இனமான, 182 நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். பெயரளவில் அவர்கள் வாழ்ந்தார்கள். அவர்களையெல்லாம் நேரில் சந்தித்து, இங்குள்ள மண்ணோடு ஒரு கனெக்டிவிட்டியைக் கொண்டு வந்து, கைப்பிடித்து, உனக்கான கிளைகளும், இலைகளும், பூக்களும் அங்கு இருக்கட்டும்; ஆனால், உன்னுடைய வேர் மட்டும் தமிழகத்தில் பத்திரமாக இருக்கிறது என்பதை அந்த உறவுகள் எல்லாம் புதுப்பிக்கின்றபோது நினைக்கின்றோம்.

ஆகா, தமிழன் என்ற ஓர் இனம் – திராவிடன் என்ற ஒரு மிகப்பெரிய குழு, உலகம் முழுவதும் பரவிக் கிடக்கிறது. அவர்களையெல்லாம் ஒருங்கிணைத்து, இன்றைக்குத் தூக்கிப் பிடிப்பதற்கு மொழி ஒரு பெரும் சாட்சியாக இருக்கிறது.

எனவேதான் சொல்கிறோம், விருப்பப்பட்டு நாங்கள் படிக்கின்றோம்; நீங்கள் கட்டாயப்படுத்தாதீர்கள் என்றுதான் சொல்கிறோம்.

சில அறிவிலிகள் சொல்கிறார்கள், "ஏன் இன்னொரு மொழி படிப்பதை வேண்டாம் என்று சொல்கிறீர்கள்?" என்று.

நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. நீங்கள் கட்டாயப்படுத்தாதீர்கள்.

ஓட்டலுக்குச் சென்ற நான், என்ன சாப்பிட வேண்டும் என்பதை நான்தான் தீர்மானிக்கவேண்டும். நீ இல்லை – ஓட்டல் முதலாளி அல்ல – சப்ளை செய்பவர் அல்ல – சமைக்கின்றவர் அல்ல – காரணம், எனக்கு எது ஒத்துக்கொள்ளும் என்பது எனக்குத்தான் தெரியும். அதுபோன்றதுதான், இந்த மண்ணுக்கு என்ன தேவை என்பதை நாங்கள் தீர்மானிக்கின்றோம். அந்தத் தீர்மானிக்கின்ற முடிவை உங்களிடம் ஒருபோதும் விடமாட்டோம்.

எனவேதான், எத்தனையோ போராட்டங்களைக் கடந்து, இன்றைக்கு முதல்வர் அவர்கள், எல்லா மிகப்பெரிய பிரச்சினைகளையும் கட்டுக்கோப்பாக வைத்திருந்தாலும், இன்றைக்கு அவரவர்களுடைய கனவுகளை, அவரவர்களுடைய திசைகளைத் துறந்துவிட்டு, எனக்கு எல்லாமுமாக இருக்கின்ற அந்த முதல்வரை எல்லாருமாகச் சேர்ந்து வாழ்த்துவோம்.

இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துகள்!

இவ்வாறு கவிஞர் சினேகன் பேசினார்.